செ.வெ.எண்: 36/ஆகஸ்ட் நாள்: 27.08.2020

**<u>பத்திரிக்கைச்செய்தி</u>**

IBPS ( Institute of Banking Personnel Selection ) வாயிலாக Probationary Officer பணியிடத்திற்க்கு இந்த ஆண்டு 1417 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இந்த பணியிடத்திற்க்கு இளங்கலை பட்டம் பெற்றவர்கள் www.ibps.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். இந்த பணியிடத்திற்க்கு முதன்மை தேர்வு வருகின்ற 03.10.2020,10.10.2020 மற்றும் 11.10.2020 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் தருமபுரியில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தின் வாயிலாக IBPS ( Institute of Banking Personnel Selection ) பணியிடத்திற்க்கு 28.08.2020 முதல் இலவச பயிற்சி வகுப்புகள் தகுதியுள்ள வல்லுநர்களை கொண்டு ஆன்லைன் வாயிலாக நடத்தப்படவுள்ளது. தற்போது RRB மற்றும் TNPSC Group II தேர்வுகளுக்கு ஆன்லைன் வாயிலாக வகுப்புகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. மேலும் விவரங்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை நேரிலோ அல்லது தொலைபேசி எண்.04342 296188 வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம். IBPS போட்டித்தேர்வினை எழுதவுள்ள இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆன்லைன் இலவச பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெறுமாறு தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**